# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.11 |
| Name | : | ஆனந்தி |
| Husband Name | : | பழனியப்பன் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 53/2025 |

**<u>தேதி : 25.03.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரி வசந்தியை தெரியும். நிதி நிறுவனங்களில் கடன் வாங்கி கொடுத்ததால் எதிரியுடன் பழக்கம் ஏற்பட்டது. எதிரி தனது மாமனாரின் மருத்துவ செலவிற்காக கடன் வாங்கி தருமாறு என்னிடம் கேட்டதால் அவருக்கு ரூ. 53,000/- அவருடைய வங்கி கணக்கிற்கு அனுப்பிவைத்தேன். **22.07.2023 முதல் 10.11.2023 வரையிலான State Bank of India செட்டிக்குளம் வங்கியின் சாட்சியின் வங்கி கணக்கு பதிவேடு அ.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கையில் ரொக்கமாக ரூ.61,000/- கொடுத்தேன். எதிரியே தவணைகளை திரும்ப செலுத்திவிடுவதாக கூறியதால் கடன் வாங்கி கொடுத்தேன். ஆனால் தவணைகளை செலுத்தவில்லை. தவணைகளை திரும்ப செலுத்தாததால் நிதி நிறுவனத்தினர் என்னை தவணைகளை திரும்ப செலுத்த சொன்னபோதுதான் எதிரி தலைமறைவான விஷயம் எனக்கு

தெரியவந்தது. அவரை பற்றி விசாரித்தபோத ஊரை விட்டு சென்றுவிட்டதாக தெரியவந்தது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

எதிரி எனக்கு பக்கத்து வீடா என்றால் பக்கத்து தெரு. எதிரி எனக்கு 1 வருடமாக பழக்கம். எதிரி எனக்கு இதற்கு முன்னாடி கடன் வாங்கி கொடுத்துள்ளார். எதிரிதான் என்னிடம் வந்து கடன் கேட்டார். பணத்தை செல்போன் மூலம் எதிரியின் வங்கி கணக்கில் போட்டேன். எதிரி இரண்டு தவணைகள் கட்டினார்கள். எதிரி மீதி தவணைகளை கட்டினால் சம்மதம். எதிரிக்கு எங்களை ஏமாற்றவேண்டும என்ற எண்ணம்இல்லை என்றாலும், நாங்கள் அனைவரும் ஒரே நேரத்தில் பணத்தை கேட்டதால் எதிரியால் கட்ட முடியாமல் போனது என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.